## சுருக்கம்

கலையும் பண்பாடும் – கலைமாமணி விருதுகள் – 2011 முதல் 2018 வரையிலான ஆண்டுகளுக்கு கலைமாமணி விருது வழங்கும் விழாவிற்கான செலவினம் ரூ.2,70,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

### சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை

அரசாணை (நிலை) எண். 79

நாள்: 18–06–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், ஆனி 3

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண் 31, சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை, நாள் 28.02.2019.
2. அரசாணை (நிலை) எண் 32, சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை, நாள் 04.03.2019
3. கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கடித ந.க.எண்.1150/ இ1/2018, நாள் 09.05.2019.

********

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2011 முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான எட்டு ஆண்டுகளுக்கான பல்வேறு கலைப் பிரிவுகளைச் சார்ந்த சிறந்த புகழ்பெற்ற இருநூற்று ஒன்று கலைஞர்களுக்கு கலைமாமணி விருதுகள், 2016 முதல் 2018 வரையிலான ஆண்டுகளுக்கு இயல், இசை, நாட்டியத் துறையில் சிறந்து விளங்கும் ஒன்பது கலைஞர்களுக்கு முறையே பாரதி, எம்.எஸ்.சுப்புலட்சுமி, பாலசரசுவதி ஆகியோர்களின் பெயரில் தலா மூன்று அகில இந்திய அளவிலான விருதுகள், மூன்று சிறந்த கலை நிறுவனங்களுக்கு விருது மற்றும் ஒரு சிறந்த நாடகக் குழுவிற்கான சுழற்கேடயம் ஆகியவற்றிற்கான பெயர் பட்டியல்களுக்கு ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், வறிய நிலையில் வாழும் எட்டு மூத்த கலைமாமணி விருதாளர்களுக்கு தலா ரூ.25,000/– தொகைக்கான பொற்கிழி விருது வழங்கி அரசு ஆணையிட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கடந்த ஆண்டுகளில் கடைபிடிக்கப்பட்டு வந்த விருது வழங்குவதற்கான நடைமுறையினைப் பின்பற்றி, மேற்காணும் கலைமாமணி விருதுகள் வழங்கிடும் விழாவினை, சென்னை கலைவாணர் அரங்கில் நடத்திடலாம் எனக் கருதப்படுகிறது எனவும், 2011 முதல் 2018 வரையிலான ஆண்டுகளுக்கான கலைமாமணி விருது, பொற்கிழி, மூன்று சிறந்த கலை நிறுவனங்களுக்கான விருது, சிறந்த நாடகக்குழுவிற்கான விருது மற்றும் அகில இந்திய அளவிலான விருதுகள் வழங்குவதற்கான

விழாவிற்கு ஏற்படும் பின்வரும் உத்தேச செலவினங்களுக்காக ரூ.2,70,00,000/- தொகையினை விடுவிக்கத்தக்க அரசாணையினை வழங்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். :-

| வ. எண். | செலவின விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | பொற்பதக்கங்கள் தயாரித்தல்<br>197 கலைஞர்களுக்கு தலா 24 கிராம் எடையுள்ள பொற்பதக்கம் தயாரித்தல் | 2,18,07,900 |
| | 3 வெள்ளிக் கேடயங்கள் தயாரித்தல் | 45,000 |
| 2. | 300 விருதுப் பட்டயங்கள் தயாரித்தல் | 6,594 |
| 3. | 250 பொன்னாடைகள் | 73,870 |
| 4. | மங்கல இசை | 20,000 |
| 5. | அரங்க வாடகை<br>(மின் கட்டணம், டீசல், குடிநீர் உட்பட) | 5,13,300 |
| 6. | அரங்க உட்புற, வெளிப்புற மின் அலங்காரம், ஒலி-ஒளி அமைப்பு பணிகள் | 61,150 |
| 7. | மேடை வடிவமைத்தல், முகப்புப்பந்தல், அலங்கார வளைவு, வாழைமரம் அமைத்தல் | 3,98,500 |
| 8. | விளம்பர பேனர்கள் | 2,00,000 |
| 9. | நிகழ்ச்சித் தொகுப்பாளர் மதிப்பூதியம் | 15,000 |
| 10. | மேடையில் உதவி புரிபவர்களுக்கான மதிப்பூதியம் | 10,000 |
| 11. | உதவியாளர்கள் | 20,000 |
| 12. | விழா குறியீட்டு அட்டை (பேட்ஜ்) | 15,000 |
| 13. | சீருந்து அனுமதி அட்டை அச்சிடுதல் | 15,000 |
| 14. | அரங்கத்தில் இருக்கைகளுக்கான வாடகைக் கட்டணம் (500 இருக்கைகள் லாபியில்) | 10,000 |
| 15. | எழுதுபொருள் | 10,000 |
| 16. | புகைப்படம், காணொளி மற்றும் ஆவணமாக்கல் | 1,20,000 |
| 17. | 3000 அழைப்பிதழ் அச்சிடுதல் | 3,00,000 |
| 18. | விழா மலர் அச்சிடுதல் | 3,89,826 |
| 19. | செய்தித்தாள் விளம்பரம் | 15,00,000 |
| 20. | தபால் கட்டணம் | 50,000 |

| | | |
|---|---|---|
| 21. | உள்ளூர் போக்குவரத்து | 25,000 |
| 22. | முக்கியப் பிரமுகர்களுக்கு வரவேற்பு பூங்கொத்து (ம) நினைவுப் பரிசு | 15,000 |
| 23. | முக்கியப் பிரமுகர்கள், பத்திரிகையாளர்களுக்கு உபசரிப்பு | 25,000 |
| 24. | அகில இந்திய அளவிலான பாரதி, எம்.எஸ்.சுப்புலட்சுமி, பாலசரசுவதி பெயரில் 9 கலைஞர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ரொக்கத் தொகை | 9,00,000 |
| 25. | அகில இந்திய அளவிலான பாரதி, எம்.எஸ்.சுப்புலட்சுமி, பாலசரசுவதி பெயரில் 9 கலைஞர்களுக்கு விருது கேடயங்கள் தயாரித்தல் | 10,000 |
| 26. | ரூ.25,000/– வீதம் 8 கலைஞர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பொற்கிழி (பணமுடிப்பு) | 2,00,000 |
| 27. | எதிர்பாராச் சில்லரைச் செலவினம் | 2,43,860 |
| | மொத்தம் | 2,70,00,000 |

4. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, சென்னை கலைவாணர் அரங்கில், 2011 முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான கலைமாமணி விருதுகள், அகில இந்திய அளவிலான விருதுகள் உள்ளிட்ட ஏனைய பிற விருதுகள் வழங்கிடும் விழாவினை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் நடத்திட மேலே பத்தி 3ல் தெரிவிக்கப்பட்டுள்ள இனங்களுக்கான உத்தேச செலவினங்களுக்காக ரூ.2,70,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே எழுபது இலட்சம் மட்டும்) தொகைக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினம் 2019–20ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். இருப்பினும், சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி (SI) இச்செலவினத்தை 2019–20ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இதனை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள கலை பண்பாட்டு ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2019–20 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2019-20) சேர்க்கத்தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதி (கல்வி–II)த் துறைக்கு அனுப்புமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – AH தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு மானியங்கள் – 309 – உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"

(த.தொ.கு.2205 00 102 AH 30903) – IFHRMS
(பழைய த.தொ.கு 2205 00 102 AH 0938)

7. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு வழங்குவதற்குரிய அதிகாரம், கலை பண்பாட்டுத் துறை ஆணையருக்கு அளிக்கப்படுகிறது.

8. மேற்காணும் கலைமாமணி விழாவின்போது விருது பெறும் கலைஞர்களுக்கு வழங்கப்படவுள்ள 3 சவரன் எடையுள்ள பொற்பதக்கங்களை உரிய நடைமுறை விதிகளைப் பின்பற்றி தமிழ்நாடு கைத்திறன் பொருட்கள் வளர்ச்சி கழகத்தின் (பூம்புகார்) மூலம் கொள்முதல் செய்யுமாறும், பொன்னாடைகள் அனைத்தும் “கோ ஆப்டெக்ஸ்” நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யுமாறும், விழாமலர், அழைப்பிதழ் மற்றும் கலைஞர்களுக்கான சான்றிதழ் ஆகியவற்றை அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையிடமிருந்து தயாரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு அறிவுறுத்துமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேற்காணும் கலைமாமணி விருது வழங்கும் விழாவிற்கு ஏற்படும் பிற செலவினங்கள் ஒவ்வொன்றிற்கும், ஒன்றிற்கும் மேற்பட்ட போட்டி நிறைந்த (Competitive) விலைப்புள்ளிகள் பெறப்பட வேண்டும் எனவும், குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்திற்கு அப்பணிகள் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு அறிவுறுத்துமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. கலைமாமணி விழாவிற்கு ஒப்பளிக்க கருதப்படும் தொகை எந்த நோக்கத்திற்காக ஒப்பளிக்கப்படவுள்ளதோ, அந்த நோக்கத்திற்காக மட்டுமே செலவிடப்பட வேண்டுமென தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு அறிவுறுத்துமாறும் கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. மேற்காணும் கலைமாமணி விருது வழங்கும் விழா முடிவுற்ற பின்னர், அவ்விழாவிற்கு உள்ளபடியாக ஏற்பட்ட செலவின விவரங்கள், அதற்குண்டான பற்றுச் சீட்டுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பயனீட்டுச் சான்றிதழ், புகைப்படங்கள், பத்திரிக்கைச் செய்திகள், விழாமலர், விழா நடைபெற்றது குறித்த அறிக்கை ஆகியவற்றை தவறாது அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு அறிவுறுத்துமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

12. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். 27005/ நிதி(கல்வி–II)துறை/ 2019, நாள்.17.06.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண் 461 (நானூற்று அறுபத்து ஒன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத்துறை, சென்னை–8.
தலைவர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை 28.
உறுப்பினர்–செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை–28.
பொருளாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை–28.

செயலாளர்(மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அண்ணாசாலை, சென்னை–2
மேலாண்மை இயக்குர்,தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், சென்னை–8
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைவினை மேம்பாட்டுக் கழகம் லிமிடெட், சென்னை– 2
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இரு படிகள்)
முதன்மை மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (G&SSA/E&RSA/A&E), சென்னை – 18
உள்ளுறை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை – 9

நகல்:–

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 9
அரசு தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், சென்னை–9
முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் – 1, சென்னை – 9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், நிதித்துறை, சென்னை–9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
நிதி (கல்வி–II./ வ.செ.பொ.I/வ.செ.பொ.II)த் துறை, சென்னை– 9
சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் (பண்–1 / பொது–2) துறை, சென்னை– 9
தொழில்நுட்ப இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை – 9
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

18/06/19

**பிரிவு அலுவலர்**

18.6.19